பக்கங்கள் 15+ 02

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை 27.07.2024 | அதிர்வு 358

வவுனியா ஏ - 9 வீதியில்

## மோ. சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்



(கி.வசந்தன்)

வவுனியா, பரசங்குளம் ஏ - 9 வீதியில் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செம்மணியில் இன்று 5 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்வு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் இன்றைய அகழ்வின் போது ஐந்து என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் 03

## சர்வதேச விசாரணையே தமிழர்களின் எதிர்பார்ப்பு

சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



வடக்கு , கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலை மற்றும் அடிப்படையில்லாத அநீதிகளுக்கு சர்வதேச நீதிப் பொறிமுறைகள் மூலம் நீதியான தீர்வை சர்வதேச சமூகம் வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 03



# ஆற்றில் இருந்து 4 வயது சிறுமி சடலமாக மீட்பு!

(பி.கேதீஸ்)

பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெவோன் நீர் வீழ்ச்சிக்கு நீர் ஏந்தி செல்லும் கொட்டகலை ரொசிட்ட பகுதியில் உள்ள ஆற்றில் இருந்து 4 வயது சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 03

## உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



புசல்லாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாஸ்வெல பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

இவர் ஐந்து நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக் கப்படுகின்றது.

இது இயற்கை மரணமா, தற் கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் புசல்லாவ மற்றும் கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் செல்வராஜா காலமானார்

## நாளை இறுதிக்கிரியை

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு, முனைக்காடு கிராமத்தில் பிறந்து கிழக்கின் முதல் கல்வியியல் பேராசிரியராக அறியப்பட்ட கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா. செல்வராஜா இன்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது பூதவுடல் நாளை திங்கட்கிழமை கிழக்கு பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் காலை 10 மணி முதல் 11 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பின்னர் இல்லத்திற்குக் கொண்டுவரப்பட்டு பிற்பகல் 4 மணியளவில் மட்டக்களப்பு கல்யங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்று தெரிகின்றது.

மட்டக்களப்பின் தனித்துவம் மிக்க கல்வியலாளராக அறியப்படும் கிழக்கிலங்கையின் முதல் கல்வியியல் பேராசிரியர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் மா.செல்வராஜா தனது 77 வது வயதில் இன்று இயற்கை எய்தினார்.

படுவான் பெருநிலப் பரப்பின் முனைக்காடு பெருநிலத்தில் 1948ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ஆம் திகதி திரு திருமதி மானாகப்போடி தம்பதிக்கு மூத்த மகனாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டுமேதாழங்குடாவில் கற்று உயர் கல்வியைக் கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தில் கற்று பல்கலைக்கழகத்துக்கு நுழைந்து பல பட்டங்களையும் பதவிகளையும் தன்னிலைப்படுத்தி கிழக்கு மாகாணத்தின் தவிர்க்க முடியாத கல்வி சக்தியாகத் திகழ்ந்தவர் எனலாம்.

குறிப்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விசேட இளமாணிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் முதுமாணிப் பட்டம், பிரித்தானிய லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப் பட்டம் எனப் பல கல்விசார் பட்டங்களைப் பெற்ற கல்வியலாளர் இவர்.

சிலகாலம் இரத்மலான இந்துக் கல்லூரி மற்றும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் அதிபராகவும் பணியாற்றினார்.

இவரது குடும்பம் முனைக்காடு கிராமத்தில் பெரு மதிப்புப் பெற்ற குடும்பமாக இன்றும் திகழ்கின்றது. குடும்பத்தின் மூத்த புதல்வரான இவர் இளமையில் இருந்து கல்வி அறிவும் சமூக சேவை சிந்தனைகளும் தூர நோக்கு எண்ணங்களும் சமய ஈடுபாடும் கொண்டவராக வளர்ந்தவர். தன் குடும்பத்தின் உயர்ச்சிக்காகவும் தன் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும் ஏணிப் படியாக நின்றவர்.

குறிப்பாக 1978/11/24 அன்று கிழக்கையே புரட்டிப் போட்ட சுறாவளியால் படுவான் பெருநிலத்தின் கல்வித் துறையும் ஸ்திரத் தன்மையிழந்து ஆட்டம் கண்டது. இந்தக் காலகட்டத்தில் 30 வயது நிரம்பிய துடுப்புள்ள இளம் ஆசிரியராக வலம் வந்த பேராசான் செல்வராஜா படுவான் கல்வித்துறைக்கு ஒளியூட்டி உயிரூட்டும் எண்ணந்துடன் ஒளிக் கல்லூரியை முனைக்காடு கிராமத்தில் ஸ்தாபித்து வயது வித்தியாசமின்றி கல்வி ஆர்வமுள்ள சகல வயதுப் பிரிவினருக்கும் கல்வித் தாகம் தீர்க்க அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்தார்.

பலரது கல்வி வளர்ச்சிக்கும் ஊன்றுதலாய் இருந்தார் பிற்காலத்தில் இவரது ஒளிக்கல்லூரியில் கல்வி கற்றோர் பலர் கல்வித் துறையில் உயரிய பதவிகளில் பணியாற்றினர். இவர் ஒளிக்கல்லூரியில் தனது மாணவர்களை கொண்டு ஏனையோருக்கும் கல்வியைப் புகட்டினார்.

ஒளிக்கல்லூரிக்கு வர முடியாத போக்குவரத்து பிரச்சினை உள்ள மாணவர்களுக்குக் கல்வி புகட்ட அவர்களது கிராமங்களுக்கு சைக்கிளில் சென்று கல்வி புகட்டி இன்றும் படுவான் மக்கள் மனதில் இருக்கும் அம்மக்களால் போற்றப்படும் ஒரு மனிதராகத் திகழ்கின்றார்.

இவரைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லப்போனால் படுவான் பெருநிலத்தின் கல்வித் துறையில் புரட்சியை ஏற்படுத்தினார் என்றே கூறலாம்.

ஆசிரியராக, அதிபராக, விரிவுரையாளராக, பேராசிரியராக, பல்கலைக்கழக வேந்தராக உயர்வடைந்த ஒரு பேராசான் மா.செல்வராஜா ஐயா. கல்வியியல் துறையிலே தேசிய கல்வி நிறுவகத்தில் செயற்றிட்ட அதிகாரியாகப் பின் தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளராகக் கடமையாற்றிய பேராசிரியர் செல்வராஜா கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் துறைத் தலைவராகவும் கல்வி, பிள்ளைநல துறைத் தலைவராகவும் கிழக்குப் பல்கலைக் கழத்தின் வேந்தராகவும் கடமையாற்றியிருந்தார்.

பேராசிரியர் ஐக்கிய அமெரிக்கா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இஸ்ரேல் எனப் பல நாடுகளுக்குச் சென்று கல்விசார் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டதுடன் கல்விசார் தலைப்பில் பல நூல்களையும் பல சஞ்சிகைகளில் கட்டுரைகளையும் எழுதியுள்ளதோடு பல ஆய்வறிக்கைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உயர்சிக்காக அளப்பெரிய சேவையை ஆற்றிய பேராசியர் கிழக்கு பல்கலைக் கழகத்தில் கலை இளமாணியில் கல்வியியலை ஒரு பாடமாகவும் கல்வியியலில் இளமாணி, முதுமாணி போன்ற சிறப்புத் துறைகளையும் தோற்றுவித்து அதனை முன்னெடுத்துச் சென்றார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு அடுத்ததாக தமிழ் மொழி மூலம் கல்விமாணிக் கற்கைநெறி கிழக்குப் பல்கலைக்கழகத்திலே முன்னெடுக்கப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

முனைக்காடு எனும் கிராமத்திலே பிறந்து இலங்கையில் கல்வித் துறையில் தனிப் பெரும் ஆளுமையாகத் திகழ்ந்து பலரது கல்விக்கு உறுதுணையாக இருந்து பல கல்வியலாளர்களை உருவாக்கிய பேராசிரியர் மா. செல்வராஜா ஐயாவின் இழப்பு கிழக்குக் கல்வித் துறையில் பேரிழப்பே ஆகும்.

# மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்தி தமிழருக்கு அதிகாரத்தை வழங்குங்கள்!

## அநுர அரசிடம் சஜித் அணி வலியுறுத்து

“மாகாண சபை முறைமை என்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பாகும். எனவே, அந்தத் தேர்தலை உடனடியாக நடத்தி மக்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து பணியை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

மக்கள் பிரதிநிதிகளின் வேலையை அரச அதிகாரிகள் செய்ய முடியாது. எனவே, மக்கள் பிரதிநிதித்துவம் அவசியம்.



உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளுக்கு அஞ்சியா மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அரசு பின்வாங்குகின்றது என்ற சந்தேகம் எழுகின்றது. முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுகின்றோம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கிய ஒரு வாய்ப்புதான் மாகாண சபை முறைமையாகும். எனவே, வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து சபைகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மக்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.” – என்றார்.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 22ஆம் நாள் அகழ்வு இன்று இடம்பெற்றது.

இன்றைய அகழ்வின் போது ஐந்து மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 95 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் அரை நாள் மாத்திரமே அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. புதாக என்புத் தொகுதிகள் எவையும் அடையாளப்படுத்தப்படவில்லை.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி மரிய நாயகம், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுச் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றில் நேற்று முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“வடக்கு, கிழக்கில் மனிதப் புதைகுழிகளில் இருந்து அநேகமாக மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுடையதாக இருக்கின்றன.

கொக்குத்தொடுவாயில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 51 மனித எலும்புக்கூடுகள் துப்பாக்கிச்சூட்டால் பாதிக்கப்பட்டவையாகவும் அடைத்து மறைக்கப்பட்டவையாகவும் மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொகுதிகளாக சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை பலர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இந்த இனப்படுகொலை குறித்து அரசு வெளிப்படையாக ஒப்புதல் அளிக்க மறுப்பதும், தமிழர் சமுதாயத்துக்கு பெரும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச நீதி மற்றும் மனித உரிமை அமைப்புக்களைத் தமிழர்கள் எதிர்பார்க்கின்றர்.” – என்றார்.

## ஆற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சனிக்கிழமை திருமண நிகழ்வுக்குச் செல்லவிருந்த வேளை தனது மகளைத் தயார் நிலையில் வைத்துவிட்டு சிறுமியின் தாய் தயாராகிக் கொண்டிருந்த போது மேற்படி சிறுமி வீட்டின் அருகாமையில் இருந்த ஆற்றில் தவறுதலாக வீழ்ந்து நீரில் அடித்துச் செல்லப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து சிறுமியைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது, சுமார் மூன்று மணித்தியாலங்களுக்குப் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட சிறுமி கொட்டகலை ரொசிட்டா தோட்டத்தைச் சேர்ந்த நான்கு வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மோ. சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் பரசங்குளம் பகுதியில் பயணித்த போது கட்டுப்பாட்டை இழந்து மின்சாரக் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதியான கிளிநொச்சி, பாரதிபுரத்தைச் சேர்ந்த 23 வயதுடைய ஜெயசீலன் திவாகரன் பலியாகியுள்ளார்.

சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாடசாலைகளுக்கு மூடுவிழா?

கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் 3,100 அரச பாடசாலைகளை மூடுவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிக்கின்றது.

- இப்படி மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

இவ்வாறு அரசாங்கம் மூடுவதற்குத் தீர்மானித்துள்ள பாடசாலைகளில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க படித்த தம்புத்தேகம பாடசாலையும் அடங்குவதாகத் தமது கட்சிக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

'கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொல்லுவார்கள். இலங்கை நாட்டுக்கும் அதை ஆளும் ஆட்சி பீடத்துக்கும் கூட அதுதான் நிலைமை. நாடு, கண்மண் தெரியாமல் பட்ட கடனை அடைக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருக்கின்றது. அதனால் அது உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றிடம் கையேந்தும் தவிர்க்க முடியாத இக்கட்டில் நாடும் அரசும் சிக்கியுள்ளன.

இதனால் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவை எதிர்பார்க்கும் - அல்லது கட்டாயப்படுத்தும் - கொள்கைத் திட்டங்கள், பொருளாதார நடவடிக்கைகள் போன்றவற்றை பின்பற்ற வேண்டிய தவிர்க்க முடியாத நெருக்கடி ஆட்சி பீடத்துக்கு உண்டு.

நாட்டின் பெருந்தொகை நிதி சுகாதாரம் மற்றும் கல்வித்துறை போன்றவற்றுக்காக செலவிடப்படுவதினால் அவை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் போன்றவை விதிக்கும் கொள்கைக் கோட்பாடுகளுக்கு இணங்கி, அவற்றைப் பின்பற்றிச் செயல்பட வேண்டிய கட்டாயம் ஆட்சி தரப்புக்கு.

அதனையே துமிந்த நாகமுவ போன்ற தென்னிலங்கைத் தலைவர்கள் ஆளும்தரப்புக்கு எதிரான விமர்சனமாக முன்வைத்து வருகிறார்கள்.

''கடந்த காலம் முழுவதும் இந்த நாட்டின் அரசாங்கங்கள் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளுக்கு ஏற்ப இந்த நாட்டில் கல்வியைச் சீர்திருத்தத் தயாராகி வருவதை நாங்கள் அறிவோம்.

''நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது உரையில் ,இலங்கையில் குறைந்த எண்ணிக்கையிலான பிள்ளைகளைக் கொண்ட பாடசாலைகள் குறித்து மிகுந்த உணர்ச்சியுடன் பேசினார்.

'' நூறுக்கும் குறைவான பிள்ளைகளைக் கொண்ட 3,141 பாடசாலைகள் இருப்பதாக அவர் கூறினார். சில பாடசாலைகளை மூடவும் சில பாடசாலைகளை இணைக்கவும் தேவையான இடங்களில் புதிய பாடசாலைகளை நிறுவவும் அவர்கள் தயாராக உள்ளனர். முதல் பார்வையில், இந்த அறிக்கையின் ஆபத்தை யாரும் புரிந்து கொள்ளவில்லை. கல்வி அமைச்சராக இருந்த கருணாசேன கொடிதுவக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அநுரகுமார திஸநாயக்கவின் உரையைப் போன்ற ஒரு உரையை நிகழ்த்தியுள்ளார். இலங்கையில் 3,000 பாடசாலைகளை மூடுவதற்கான திட்டத்தை முதன் முதலில் கொண்டு வந்தவர் அவர்தான். அந்த நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியும் அந்தத் திட்டத்திற்கு எதிராகப் போராடியது. அப்போது பாடசாலைகளை பாதுகாப்பதற்காக பாடசாலை பாதுகாப்பு இயக்கம் உருவாக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் இப்போது பாடசாலைகளை மூடுவதற்கான உலக வங்கியின் திட்டத்தைச் செயல்படுத்த தயாராகி வருகின்றனர்'' - என துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க வேண்டும். பாடசாலைகளை மூடும் நிலைமை மாற்றியமைக்க வேண்டும்.



# விட்டுக்கொடுப்புடன் தனியார் பஸ் சங்கங்கள்; பல பிரச்சினைகள் இலகுவாகத் தீர்க்கப்பட்டன!

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

ஒற்றுமையான சேவைக்காக பல சந்தர்ப்பங்களில் விட்டுக்கொடுப்புடன் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் செயற்பட்டன. இதனால் போக்குவரத்துச் சம்பந்தமாக எழுந்த பல பிரச்சினைகள் எங்களால் தீர்க்கக் கூடியதாக இருந்தன. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன் தலைமைப் பதவியில் 25 ஆண்டுகள் பூர்த்தி செய்தமைக்கான கௌரவிப்பு விழாவும், இணையத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில் தெரிவித்தாவது,

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வைத் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டு குடா நாட்டுக்கு நாம் திரும்பினோம். அப்போது தெல்லிப்பழை உதவி அரச அதிபராகக் கடமையாற்றினேன். எமது அலுவலகம் தனியார் வீட்டில் மல்லாகத்தில் இருந்தது. அப்போது அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த பிரிகேடியர், மக்கள் மீளவும் வருவதற்கு என்ன உதவிகள் தேவை எனக் கேட்டார்.

போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என நான் குறிப்பிட்டேன். இதன்போதுதான் கெங்காதரன் எனக்கு அறிமுகமானார். அப்போது அவர் தெல்லிப்பழை சங்கத்துக்கு தலைவராக இருந்திருக்கவேண்டும். அவர், எரிபொருள் பிரச்சினை இருக்கின்றது என்று பிரிகேடியரிடம் குறிப்பிட்டார். அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு போக்குவரத்துச் சேவை ஆரம்பமாகியது.

அன்று தொடக்கம் இன்றுவரையில் கெங்காதரன் என்னுடன் பயணித்து வருகின்றார். அவர் எப்போதும் எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லமாட்டார். மீள்குடியமர்வு நேரங்களில் எங்களுடன் இணைந்து அந்த மக்களின் மீள்குடியமர்வுக்காக பல்வேறு வகைகளில் போக்குவரத்துச் சேவையை ஒழுங்குபடுத்தித்தந்தவர். அந்த வகையில் அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நன்றி கூறுகின்றேன். தனது சங்க ஊழியர்களின் தேவைகளுக்காக விடாப்பிடியாக நிற்பார். அதேபோல நாங்கள் கேட்கும் விடயங்களையும் சங்க ஊழியர்களைக் கொண்டு செய்விப்பார். இதனால் எப்போதும் அவருக்கும் அரச நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையில் நல்லுறவு இருந்து வருகின்றது.

சரியானதைச் செய்வதற்கு யாருக்கும் பயப்படத்தேவையில்லை என்பதே எனது நிலைப்பாடு. குறைசொல்பவர்கள் சொல்லிக்கொண்டிருப்பார்கள். எப்போதும் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. நீதியான – நேரிய வழியில் செல்லத் தவறுபவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கும், குறைகளுக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்றே நான் நினைக்கின்றேன்.– என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், உதவிப் பிரதம செயலாளர் திருமதி அனெற் நிந்துஸா அன்ரனி டினேஸ், வடக்கு மாகாண பிரதிப் பதிவாளர் நாயகம் ப.பிரபாகர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளர் ப.ஜெயராஜா, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண ஆகியோர் கலந்துகொண்டனர்.



# நாளை அம்மன் ஆலய ஆடிப்பூரம்!



(வி.ரி.சகாதேவராஜா)

நாளை 28 ஆம் திகதி திங்கட் கிழமை அம்மனுக்குரிய ஆடிப்பூரம். இந்துக்கள் வாழ்கின்ற பட்டிதொட்டி யெங்கும் இவ்விழா கொண்டாடப் படவிருக்கிறது.

நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர திருவிழா நாளை (28) திங்கட்கிழமை நடைபெறவுள் ளது .

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண் முக மகேஸ்வரக் குருக்கள் முன்னி லையில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா தலைமையில் ஆடிப்பூரத் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபை தலைவர் கே.ஜெயசிறில் தெரிவிக்கையில், அம்மனுக்கு உரிய இந்த நன்நாளில் எமது ஆலயத்தில் இரண்டாவது தடவையாக ஆடிப்பூரம் அனுஷ்டிக் கப்படவுள்ளது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவித்தார் .






### நூறு வருடங்கள் பழமை வாய்ந்த

# நோர்வூட் பிரதேச தொங்கு பாலங்கள் இளைஞர்களது பங்களிப்பில் திருத்தம்!

(பொகவந்தலாவ எஸ்.சதீஷ்)

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத இரண்டு தொங்கு பாலங்களையும் புனரமைத்து மக்கள் பாவனைக்கு கையளித்துள்ளனர் எல்பட தோட்ட இளைஞர்கள்.

நோர்வூட் பிரதேச சபைக்குச் சொந்தமான பொகவந்தலாவ கெர்க்கஷ்வோல்ட் எல்பட கீழ்பிரிவு மற்றும் மேல் பிரிவு ஆகிய தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் பாட சாலை மாணவர்கள் நளாந்தம் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் கேசல் கமுவ ஓயாவை ஊடறுத்துச் செல்லும் இரண்டும் தொங்கு பாலங்களை எல்பட தோட்ட இளைஞர்களின் சொந்த முயற்சியில் புனரமைத்து மக்கள் பாவனைக்கு கையத்தனர்.

இந்த நிகழ்வு இன்று (27) ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது பாலம் அமைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்றன. தொடர்ந்து குறித்த இரண்டு தொங்கு பாலங்களும் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கெர்க்கஷ்வோல்ட் தோட்ட உதவி முகாரமயாளர்கலான டி.எம். ஆர்.எஷ். மதுவந்திஷாநாயக்க, பி.எம்.ஏ.ஆக்கேஷ்சரமசிங்க, தோட்ட இளைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இரண்டு பாலங்களும் நோர்வூட் பிரதேச சபைக்கு சொந்தமானவை. இந்தப் பாலம் சுமார் நூறு வருடங்கள் பழமை வாய்ந்தன. இந்த பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு பல அரசியல் வாதிகளிடம் கோரிக்கைகள் முன் வைத்து வந்த போதிலும் இந்த பாலம் தொடர்பில் எவரும் அக்கரை செலுத்த வில்லை. ஆகையால் நாங்கள் எமது தோட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்பபோடு எமது தோட்ட இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இரவு பகல் பாராமல் பாலத்தைப் புனரமைத்து மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது என்று எல்பட தோட்ட இளைஞர்கள் தெரிவித்தனர் .



இன்றைய நாள் குறித்த பாலத்தைச் சில அரசியல்வாதிகள் திறக்கப் போகின்றனர் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் இளைஞர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்த போதிலும் பாலம் திறப்பு விழா நிகழ்வும் இடம் பெற்ற பகுதிக்கு இளைஞர்களின் பாதுகாப்பு கருதி விசேட அதிரடிபடையினரும் நோர்வூட் பொலிஷாரும் குவிக் கப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப் பட்டது.





# ஓட்டோ தடம்புரண்டு விபத்து!



(மஸ்கெலியா)

வாசனை திரவியங்கள் மற்றும் சவர்க்கார பொருள்கள் ஏற்றிச் சென்ற ஓட்டோ ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் கொட்டகலை ஹட்டன் பிரதான வீதியில் இடம்பெற்றது.

கிரிஸ்லஸ் பாம் பகுதியில் உள்ள ஆற்றில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் ஓட்டோவுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அந்த ஓட்டோவில் பயணித்த இரண்டு பேர் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர் என்று திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைத் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# அக்கரைப்பற்று பிரதான வீதியில் ஓட்டோ - கார் மோதி விபத்து!

**(வடிவேல் டினேஸ்)**

அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் அக்கரைப்பற்று மத்திய தபால் நிலையத்துக்கு முன்பாக கல்முனை பகுதி நோக்கிச் சென்ற ஓட்டோவும் அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த மோட்டார் காரும் விபத்துக்குள்ளாகின.

இன்று பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோ சாரதி காயங்களுடன் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பிரதான வீதியில் அக்கரைப்பற்று நோக்கி பயணித்த கார் கல்முனை பகுதி நோக்கி பயணித்த ஓட்டோ மீது வீதியின் நடுவே காணப்படும் மின்கம்பம் நடும் பகுதிக்கு மேலாக பாய்ந்து மறு பக்கமாக சென்று மோதியது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.










# வடக்கு இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவை சங்கத்தின் ஒன்றுகூடலும் பாராட்டும்

வடக்கு மாகாண இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவைச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் சேவைநலன் பாராட்டு விழாவும் கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோயிலுக்கு அண்மையிலுள்ள திவ்ய மஹாலில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற பிரதம செயலாளர் இ.இளங்கோவன் விசேட விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில் தெரிவித்ததாவது,

பல தொழிற்சங்கங்கள் வடக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்சங்கங்களும் அந்தத் தொழிலுக்கு உரியனவாக இருக்கின்றன. சில தொழிற் சங்கங்கள், தாங்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை மேற்கொள்ளப்போகின்றோம், அதற்கு முன்னதாக என்னைச் சந்திக்க வேண்டும் என்று கேட்பார்கள். அப்படியான சங்கங்களுக்கு, முதலில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தி முடித்து விட்டு வாருங்கள். அதன் பின்னர் கதைப்போம் என்றுதான் நான் எனது பொதுமக்கள் தொடர்பு அலுவலர் ஊடாகச் சொல்வதுண்டு.

ஆனால் உங்களின் தொழிற்சங்கம் மிகவும் வித்தியாசமானது. ஆரம்பத்திலிருந்தே உங்கள் தொழிற்சங்கத்தின் அணுகுமுறை என்னை மிகவும் கவர்ந்திருந்தது. இதை நான் பல தடவைகள் ஏனைய தொழிற்சங்கங்களுக்கு கூட முன்னுதாரணமாகச் சொல்லியிருக்கின்றேன்.

பெரும்பாலான தொழிற்சங்கங்கள் தங்கள் அங்கத்தவர்களின் நலன்களை முதன்மைப்படுத்தியே கோரிக்கைகளை முன்வைப்பார்கள். தங்களுக்குத் தேவையான சலுகைகளை உறுதிப்படுத்திக் கொள்வதே அவர்களின் எண்ணமாக இருக்கும். ஆனால் உங்கள் தொழிற்சங்கம் என்னை முதல் தடவை சந்தித்ததில் இருந்து, தங்களின் தொழில் மேம்பாட்டுக்கு எவ்வாறான உதவிகள் தேவை என்பதையே முதன்மைப்படுத்திக்கோரி வந்திருக்கின்றார்கள்.

நீங்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் தொடர்பில் எனக்குத் தெரியும். பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இங்கிருந்துதான் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்குச் சென்று பணியாற்றுகின்றீர்கள். அதேநேரம் வடக்கில் அனைத்து வகையான தொழில்நுட்ப அலுவலர்களுக்குமான 66 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதனை முழுவதுமாக நிரப்புவதற்கு எங்களுக்கு கடந்த வாரம் அனுமதி கிடைத்துள்ளது.

கட்டுமானங்களைப் பொறுத்தவரையில் தொழில்நுட்ப சேவை என்பது மிக முக்கியமானது. நீங்கள் எங்கள் மாகாணத்துக்கு மக்களுக்காக ஆற்றிவரும் சேவையைப் பாராட்டுகின்றோம்.– என்றார்.









# சம்மாந்துறை பொலிஸ் நிலைய அணிவகுப்புப் பரிசோதனை!

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2025 ஆம் ஆண்டுக்கான மாதாந்த அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனையும் பொலிஸ் நிலைய வளாகத்தில் இன்று நடைபெற்றன.

சம்மாந்துறை பொலிஸ் நிலையபதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர் தலைமையில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையில் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் கலந்து கொண்டு அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள், சுற்று சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறை, உடைகள், விடுதிகள், அலுவலகங்கள் என்பவற்றை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

பொலிஸ் நிலையத்திலுள்ள பௌதீக வள பற்றாக்குறை தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இறுதியாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வழிப்படுத்தல் வகுப்பு உதவி பொலிஸ் அத்தியட்சகரால் மேற்கொள்ளப்பட்டது.









# பெண் ஆளுமை விருது பெற்ற றிகாஸா ஷர்பீன்!

(அபு அலா)

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீனின் ஆளுமை மற்றும் திறமைகளைப் பாராட்டி சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் சி.டி.களுவாராச்சி, அவருக்கு பெண் ஆளுமை என்ற விருதை வழங்கிக் கௌரவித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தின் 30 வருட பூர்த்தியை முன்னிட்டு, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வின்போது அவருக்கான இந்த விருது வழங்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக் களத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தராக .எப்.றிகாஸா ஷர்பீன் நியமனம் பெற்று, சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் இணைக்கப்பட்ட 5 வருட சேவைக் காலத்தினுள், சமுர்த்தி சமுதாய அடிப் படை அமைப்பினூடாக ஏழை மக்களுக்கு பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி பிரதேச செயலகத்துக்கும் சமுர்த்தி பிரதேச சமுதாய அடிப்படை அமைப்புக்கும் நற்பெயரைப் பெற்றுக் கொடுக்க காரணமான அமைந்த சிறந்ததொரு ஆளுமைப் பெண்ணாக இன்றுவரை திகழ்ந்து வருகிறார்.

பல்வேறுபட்ட தூரநோக்கு சிந்தனைகளுடன்தனது பொறுப்புக்களையும் தாண்டி செயற்பட்டு வரும் இளம் உத்தியோகத்தரின் ஆளுமையுள்ள செயற்பாடுகளை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சி.டி.களுவாராச்சி பாராட்டி விருதையும் வழங்கிக் கௌரவித்தார்.



# சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக மாணவிகளை விழிப்பூட்டும் செயலமர்வு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகளிடையே சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு மேற்கொள்ளும் நோக்கில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் அனுசரணையில் கல்லூரி முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதான வளவாளராக கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரும் பொது மக்கள் பாதுகாப்புக் குழுவின் பொறுப்பதிகாரியான ஏ.எல்.ஏ. வாஹீத் கலந்து கொண்டார்.

இந்தச் செயலமர்வில் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல் அதிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல், துஷ்பிரயோகத்தின் வகைகள், அறிகுறிகள் மற்றும் அதை எவ்வாறு கையாளுதல், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான சட்டங்கள் மற்றும் நடைமுறையை அறிந்து கொள்ளுதல் என்பது பற்றிய தகவல்களை நிகழ்த்துகை மூலம் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் பாதுகாப்பு குழு தலைவர், மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருச்சி விமான நிலையத்தில் மோடி - பழனிசாமி சந்திப்பு

கங்கைகொண்டசோழபுரம் ஆடி திருவாதிரை விழாவில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி நேற்றிரவு திருச்சி வந்தார். விமான நிலையத்தில் பிரதமர் நரேந்திர மோடியை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

தூத்துக்குடியில் நேற்று இரவு 4,900 கோடி ரூபா மதிப்பிலான திட்டப் பணிகளை தொடங்கிவைத்த பிரதமர் மோடி, அங்கிருந்து விமானம் மூலம் புறப்பட்டு இரவு 10.30 மணியளவில் வந்தடைவார் என்று கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாக 10 மணிக்கே திருச்சி வந்து சேர்ந்தார் பிரதமர். விமான நிலையத்தில் அவரை அமைச்சர் கே.என். நேரு, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, ஆர்.காமராஜ், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், புதிய நீதிக்கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம், துரை வைகோ எம்.பி. உள்ளிட்டோர் வரவேற்றனர்.

பின்னர், பிரதமர் மோடி அங்கிருந்து காரில் புறப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலையில் உள்ள கோர்ட்யார்ட் மாரியாட் ஹோட்டலில் தங்கினார். இன்று காலை 11 மணிக்கு ஹோட்டலில் இருந்து



காரில் புறப்பட்டு திருச்சி விமான நிலையம் சென்று, அங்கிருந்து, ஹெலிக்கொப்டர் மூலம் அரியலூர் மாவட்டம் கங்கைகண்ட சோழபுரம் செல்கிறார். அங்கு நடைபெறும் ராஜேந்திர சோழன் ஆடித்திருவாதிரை விழாவில் பங்கேற்கிறார்.

மீண்டும் அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் புறப்படும் பிரதமர் மோடி, திருச்சி விமான நிலையம் வந்தடைகிறார். இங்கிருந்து பிற்பகல் 2.30 மணிக்கு தனி விமானம் மூலம் டில்லி புறப்பட்டு செல்கிறார்.

பிரதமர் வருகையையொட்டி, அவரது சிறப்பு பாதுகாப்புக்குழு டி.ஐ.ஜி. விமுக்த் நிரஞ்சன் தலைமையிலான அதிகாரிகள், திருச்சி விமானநிலையம், பிரதமர் தங்கும் ஹோட்டலை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பும், ஹோட்டலில் 6 அடுக்கு பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. மாநகர் முழுவதும் சுமார் 1,400 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமரின் திருச்சி வருகையையொட்டி, விமான நிலையம் அருகே உள்ள கொட்டப்பட்டு இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் முன்பு துணிகளாலான திரை கொண்டு மறைக்கப்பட்டது.

இதனால் பல்வேறு வகையான விமர்சனங்கள் எழுந்ததால், முகாம் முன்பு அமைக்கப்பட்டிருந்த திரைகள் நேற்று அகற்றப்பட்டன. விமான நிலையத்தில் இருந்து பிரதமர் வந்து செல்லும் வழித்தடத்தில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் நேற்று முன்தினம் இரவு முதல் இன்று மதியம் வரை மூட பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், விமான நிலையம் மற்றும் ஆட்சியர் அலுவலக சாலையை சுற்றியுள்ள குடியிருப்புகள் மற்றும் ஹோட்டல்களை பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

பிரதமர் மோடி இன்று காலை கங்கை கொண்ட சோழபுரத்துக்கு செல்வதற்காக திருச்சி விமான நிலையத்தில் 4 இராணுவ ஹெலிக்கொப்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதில் ஏதாவது ஒரு ஹெலிக்கொப்டரில் பிரதமர் மோடி பயணிப்பார் என்று கூறப்படுகிறது.

# தமிழக வளர்ச்சிக்கு உறுதிபூண்டுள்ளோம்: தூத்துக்குடியில் பிரதமர் மோடி தெரிவிப்பு

“தமிழகத்தின் வளர்ச்சி, மேம்பட்ட தமிழகம் என்ற கனவுக்கு உறுதி பூண்டுள்ளோம். முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது தமிழகத்துக்கு கிடைத்த நிதியை விடவும், மூன்று மடங்கு கூடுதல் நிதியை கடந்த 10 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வழங்கியுள்ளது.”

- இவ்வாறு தூத்துக்குடியில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் விரிவாக்கம் செய்யப்பட்ட விமான நிலைய மேம்படுத்தப்பட்ட புதிய முனையத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று இரவு திறந்து வைத்தார். 4,874 கோடி ரூபா மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கலும் நாட்டினார். பிரிட்டன் மற்றும் மாலைதீவு சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேரடியாக தூத்துக்குடி வந்த பிரதமர் மோடி, இந்த திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். ‘வணக்கம்’ என தமிழில் சொல்லி தனது உரையை தொடங்கினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இன்று தூத்துக்குடி விமான நிலைய புதிய முனையம், இரண்டு பிரதான வீதி கட்டமைப்பு திட்டம், ரயில் திட்டம் மாதிரியானவை இங்கு வசிக்கும் மக்களுக்கு வணிக ரீதி




யாகவும், வேலைவாய்ப்பு சார்ந் தும் புதிய வாய்ப்புகளை உருவாக்கும். தேசத்தின் தொழில் வளர்ச்சியில் ரயில் கட்டமைப்புகள் முக்கியம் என எங்களது அரசு கருதுகிறது. அதன் காரணமாக பல்வேறு ரயில் திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணிக் கிறோம்.

எங்கள் அரசின் ரயில் கட்டமைப்பு சார்ந்த திட்டங்களில் தமிழகம் முக்கியமானதாக உள்ளது. தேசத்தின் முதல் செங்குத்து ரயில் தூக்கு பாலம் தமிழகத்தின் பாம்பனில் கட்டப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்பு தான் ஜம்மு காஷ்மீரில் செனாப் பாலம் திறக்கப்பட்டது. இது நமது தேசத்தின் பொறியியல் அற்புதம் ஆகும். ஜம்மு முதல் ஸ்ரீநகர் வரையிலான பகுதியை இணைக்கும் முதல் ரயில் பாலமாக செனாப் பாலம் உள்ளது.

அடல் சேது பாலம், சோன்மார்க் சுரங்கப்பாதை என பல்வேறு உள் கட்டமைப்பு வசதிகளை என்.டி.ஏ. அரசு கட்டமைத்துள்ளது. அதே போல தென் தமிழகத்தின் கோடி கணக்கான மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி உள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையம் சார்ந்த முக்கிய திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினேன். சூரிய மின்சக்தி திட்டம் தமிழகத்தில் முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த ஆண்டு பில்கேட்ஸுக்கு தூத்துக்குடி முத்துக்களை பரிசளித்தேன். இங்கு காணப்படும் முத்துக்கள் உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது.

தமிழகத்தின் வளர்ச்சி, மேம்பட்ட தமிழகம் என்ற கனவுக்கு உறுதிபூண்டுள்ளோம். தமிழகத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து வந்துள்ளோம். கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்துக்கு 3 லட்சம் கோடி ரூபாவை மத்திய அரசு அளித்திருக்கிறது. முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது தமிழகத்துக்கு கிடைத்த நிதியை காட்டிலும் மூன்று மடங்கு கூடுதல் நிதியை கடந்த 10 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வழங்கியுள்ளது.

கடந்த 11 ஆண்டுகளில் 11 புதிய மருத்துவ கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. முதன்முறையாக கரையோர மீன்பிடி துறைமுகங்களுக்கு இத்தனை கரிசனத்தையும் அக்கறையையும் யாரும் வெளிப்படுத்தவில்லை. உங்களிடம் கரைபுரண்டு ஓடும் உற்சாகத்தை காண்கிறேன்.” என்றார்.



# ஈரானில் நீதித்துறை கட்டடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 09 உயிரிழப்பு; 22 பேர் படுகாயம்

ஈரானில் நீதித்துறை கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பொது மக்கள் அறுவர் உட்பட தாக்குதல்தாரிகள் என 09 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 22 பேர் படுகாயமடைந்துள்ளனர் என இஸ்லாமிய புரட்சிகர காவல் படை தெரிவித்துள்ளது.

ஈரானின் ஜஹேதானில் உள்ள நீதித்துறை கட்டடத்தின் மீது ஜெய்ஷ் அல்-அதில் பயங்கரவாதிகள் திடீரென சரமாரி தாக்குதல் நடத்தி உள்ளனர். இந்த தாக்குதலில் சம்பவ இடத்திலேயே ஆறு பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் பலத்த காயமுற்றனர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு, ஜெய்ஷ் அல் -அதில் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. நீதிமன்றத்தைச் சுற்றி துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிச்சத்தங்கள் கேட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து நீதித்துறை தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

மத்திய ஜாஹேதானில் உள்ள நீதித்துறை வளாகத்திற்குள் உள்ள நீதிபதிகளின் அறைக்குள் துப்பாக்கிதாரிகள் நுழைந்தனர். அவர்கள் சரமாரி தாக்குதல் நடத்தியதில் நீதிபதிகள் 13 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளுக்கு பாதுகாப்பு படையினர் தக்க பதிலடி கொடுத்தனர். இதில் பயங்கரவாதிகள் மூன்று பேர் கொல்லப்பட்டனர் என இஸ்லாமிய புரட்சிகர காவல் படை தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை ஈரான் அதிகாரிகள் கடுமையாகக் கண்டித்துள்ளனர். இது தேசிய பாதுகாப்பை சீர்குலைக்கும் நோக்கம் கொண்ட பயங்கரவாதச் செயல். விசாரணைகள் நடந்து வருகின்றன, மேலும் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த தாக்குதலின் பின்புலத்தில் இஸ்ரேல் உள்ளதாக ஈரான் குற்றம்சாட்டியுள்ளது.














# வியட்நாமில் இடம்பெற்ற பஸ் விபத்தில் குழந்தைகள் உள்ளிட்ட 10 பேர் உயிரிழப்பு

வியட்நாமில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சிக்கி குழந்தைகள் உள்ளிட்ட 10 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வியட்நாமில் ஹனோயிலிருந்து - டானாங்கிற்கு பஸ் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த பஸ் திடீரென வீதியை விட்டு விலகி போக்கு வரத்து அடையாள பலகைகளில் மோதி கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் குழந்தைகள் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த பயணிகள் அனைவரும் சிகிச்சைக்காக அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வியட்நாமில் வீதி விபத்துகள் அதிகமாக இடம்பெறும் நிலையில், அந்நாட்டு தேசிய புள்ளிவிபர அலுவலகத்தின் அதிகாரபூர்வ தரவுகளின்படி, இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மாத்திரம் வீதி விபத்துகளால் 5,024 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பலஸ்தீனத்தை தனியான நாடாக அங்கீகரிக்க பிரித்தானியா ஆதரவு

பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு பிரித்தானியா ஆதரவு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன அரசை பிரான்ஸ் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் அறிவித்துள்ளார்.

இமானுவேல் மக்ரோனின் அறிவிப்பிற்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், பலஸ்தீனத்தை தனி நாடாக பிரான்ஸ் அங்கீகரித்ததை பிரித்தானியாவும் ஆதரிப்பதாக பிரித்தானிய அமைச்சரவை அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாலஸ்தீன அரசை தாம் ஆதரிப்பதாகவும், மேலும் இதுபோன்ற நீண்டகால அரசியல் தீர்வு ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் உருவாக்கப்படுவதை உறுதிசெய்ய விரும்புகிறோம்.

ஆனால் இப்போது, இன்று, துன்பத்தைத் தணிப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மேலும் காசாவில் உள்ள தீவிரமான, நியாயப்படுத்த முடியாத துன்பங்களை நாங்கள் கையாள்கிறோம்.

அதுதான் இன்று நமது முதன்மையான முன்னுரிமையாக இருக்க வேண்டும் எனவும் பிரித்தானிய அமைச்சரவை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது ஆபத்தானது மற்றும் தவறானது. பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது பயங்கரவாதத்திற்கு வெகுமதி அளிக்கிறது.

பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலுடன் இணைந்து அமைதியை நாடவில்லை என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் - 2

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 27/07/2025

## கனடா அருகே உடைந்த மிகப்பெரிய பனிப்பாறை!



கனடாவின் Newfoundland C2

# லயோலா கல்லூரியில் கனடா பாதிரியார் மரணம்

## விசாரணை நடத்தக் கோரும் பா.ஜ.க.





சென்னை லயோலா கல்லூரியில் கனடாவைச் சேர்ந்த பாதிரியார் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, முழுமையான மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்த ஏ.என்.எஸ். பிரசாத் வலியுறுத்தியுள்ளார். C2▶



# மின்னல் தாக்கத்துக்கு இலக்கான பெண் ஒருவர் உயிர் பிழைத்தார்

கனேடிய நகரமொன்றில் மின்னல் தாக்கியும் இளம்பெண்ணொருவர் உயிர் பிழைத்த அதிசயம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

வியாழக்கிழமை மாலை கனடாவின் ஆல்பர்ட்டா மாகாண தலைநகரான எட்மண்டனில் வாழும் Laura Penner என்னும் இளம்பெண்ணும் 21 வயதுடைய அவரது தோழியும் வீடு திரும்பிக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

லாரா வீட்டுக்குச் செல்ல, அவரது தோழி வீதியைக் கடந்து C2▶

# தீபச்செல்வனின் சயனைட் நாவல் கனடாவில் அறிமுகமாகின்றது




ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய சயனைட் நாவலின் அறிமுக நிகழ்வு கனடாவில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வானது இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு, 80 TRAVAIL ROAD, UNITS 1 & 2, MARKHAM, ON L3S 3J1 எனும் முகவரியில் அமைந்துள்ள CTCC BUSINESS CENTER மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிஜக் கதையை தழுவிய வீரகாவியத்தின் துயரமாக அமையப்பெற்ற இந்த நாவல் வெளியாகி இரண்டு மாதங்களுக்கு இடையில் மறுபதிப்பையும் கண்டு வரவேற்பைப் பெற்று வருகின்றது.

கடந்த ஜனவரி 03 ஆம் திகதி சென்னையிலும் கடந்த மார்ச் 29 ஆம் திகதி கிளிநொச்சியிலும் ஜுன் 15 ஆம் திகதி லண்டனிலும் வெளியீடு கண்ட பெருங்களங்கள் கண்ட ஈழத் தளபதியின் கதையான தீபச்செல்வனின் சயனைட் எழுச்சியும் வீழ்ச்சியும் கண்ட ஈழத் தமிழ் வரலாறு குறித்த நாவல் ஆகும்.

## கனடா அருகே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் உள்ள கடற்பரப்பில் மிகப்பெரிய பனிப்பாறையின் ஒரு பகுதி உடைந்து கடலில் விழுந்த காட்சிகள் வெளியாகியுள்ளன.

புவி வெப்பமயமால் காரணமாக கீரின்லாந்து கண்டத்திலிருந்து உருகியதால் கடலில் உலா வரும் மிகப்பெரிய பனிப்பாறைகள் அதிக வெப்பம் காரணமாக அவ்வப்போது உருகி உடைவது வழக்கம்.

அந்த வகையில் கடலில் மிதந்து வந்த பனிப்பாறை, கனடா கடல்பகுதி அருகே உடைந்ததால், ராட்சத அலைகள் எழுந்தது தொடர்பான காணொலி வெளியாகி வைரலாகி வருகிறது.

## மின்னல் தாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மறுபக்கம் உள்ள பஸ் நிறுத்தத்துக்குச் சென்றுள்ளார்.

அன்று மதியம் முதலே அப்பகுதியில் இடியுடன் மழை பெய்துகொண்டிருந்திருக்கிறது.

லாரா வீட்டுக்குள்ளிருந்து தன் தோழியைப் பார்த்துக்கொண்டிருக்க, திடீரென ஒரு ஒளி வானத்திலிருந்து அவரைச் சூழ்ந்து கொண்டதையும், அவர் தரையில் விழுந்ததையும் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

அதாவது, லாராவின் தோழியை மின்னல் ஒன்று தாக்கியுள்ளது.

உடனேலாராவும்அவரதுகுடும்பத்தினரும்அந்தப்பெண்ணை நோக்கி ஓட, லாராவின் குடும்பத்தினர் அவருக்கு உயிர் காக்கும் சிகிச்சை அளிக்க, லாரா அவசர உதவியை அழைத்துள்ளார்.

அப்போது அங்கு ஒரு பஸ் வர, அந்தப் பஸ்ஸிலிருந்து மார்ட்டி என்பவரும் தரையில் ஒரு பெண் விழுந்து கிடப்பதைக் கண்டு அவருக்கு உதவ பஸ்ஸிலிருந்து இறங்கி ஓட, ஒரு கூட்டமே அவரை சூழ்ந்துகொண்டுள்ளது.

சிறிது நேரத்தில் மருத்துவ உதவிக்குழுவினர் அங்கு வர, உடனடியாக அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவரை கோமா நிலைக்குக் கொண்டு சென்றுள்ள மருத்துவர்கள், அவர் உடலில் மின்னல் தாக்கியதால் ஏற்பட்டுள்ள தீக்காயங்களுக்கு சிகிச்சை அளித்துவருகிறார்கள்.

அவர் கோமா நிலையிலிருப்பதால், அவரது ஒப்புதல் கிடைக்காததால், அவரது பெயர் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில், கனடாவில் சராசரியாக ஆண்டொன்றிற்கு இரண்டு முதல் மூன்று மரணங்களும், சுமார் 180 காயம் ஏற்படுத்தும் சம்பவங்களும் மின்னல் தாக்குவதால் ஏற்படும் நிலையில், லாராவின் தோழி உயிர் பிழைத்தது அதிசயம் தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லயோலா கல்லூரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்னை லயோலா கல்லூரியில் கனடா நாட்டைச் சேர்ந்த பாதிரியார் மர்மமான முறையில் உயிரிழந்தமை தொடர்பாக, முழுமையான மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என தமிழக பா.ஜ.க. மாநில ஊடகப் பிரிவு செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரி வளாகத்தில் உள்ள தேவாலயத்தில் பாதிரியராக சேவை செய்து வந்த 55 வயதான கனடா நாட்டு பாதிரியார் ஓமாலா சில நாள்களுக்கு முன்பு மர்மமான முறையில் உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவிலிருந்து சென்னைக்கு வந்த பாதிரியார் ஓமாலாவின் குடும்பத்தினர், அவரது மரணம் குறித்து சந்தேகம் எழுப்பியுள்ளதாகவும் இதனையடுத்து, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

கல்லூரி நிர்வாகம் பொலிஸிடம் முறையாகத் தகவல் தெரிவிக்காதது குறித்து கேள்வி எழுப்பிய பிரசாத், “ஒரு வெளிநாட்டுப் பிரஜை திடீரென உயிரிழக்கும்போது, அந்த நபரை பணியமர்த்திய நிறுவனம் உள்ளூர் பொலிஸில் புகார் அளிப்பது கடமையாகும். லயோலா கல்லூரி நிர்வாகம் அவ்வாறு புகார் அளித்ததா அல்லது அதன் அடிப்படையில் முறையான விசாரணை தொடங்கப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. சென்னை மாநகர காவல்துறை இது குறித்து தெளிவுபடுத்த வேண்டும்,” என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், தமிழகம் முழுவதும் உள்ள தேவாலயங்களில் பணிபுரியும் வெளிநாட்டு மதபோதகர்கள் குறித்து விரிவான தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

“இந்த வெளிநாட்டு மதபோதகர்கள் தங்கள் உத்தியோக பூர்வ கடமைகளுக்கு மேலதிகமாக மத மாற்றங்களிலும் ஈடுபடுகிறார்களா என்பதை அரசாங்கம் மதிப்பிட வேண்டும். அவர்களின் நிதி ஆதாரங்களும் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும்,” என்றும் அவர் தெரிவித்தார்.

பாதிரியார் ஓமாலாவின் உடல், குடும்பத்தினர் மரணத்திற்கான காரணம் குறித்து சந்தேகம் எழுப்பிய பின்னரே, ஃப்ரீசரில் இருந்து பிரேதப் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டதாக பிரசாத் மேலும் குற்றம் சாட்டினார்.

இவ்வழக்கில் தமிழக உள்துறைச் செயலாளர் மற்றும் காவல்துறை தலைவர் (டி.ஜி.பி) உடனடியாகக் கவனம் செலுத்தி, வெளிப்படையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று பிரசாத் கோரினார்.

மேலும், பொலிஸ் தெளிவான வழிகாட்டுதல்களை வெளியிட வேண்டும் என்றும், சர்வதேச அளவில் சம்பந்தப்பட்டிருப்பதால், தேவைப்பட்டால் வழக்கை சி.பி.ஐக்கு மாற்ற பரிந்துரைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். உண்மை வெளிவர வேண்டும், நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று பிரசாத் உறுதிபடத் தெரிவித்தார்.